## <u>சுருக்கம்</u>

கைத்தறித் தொழில் – காஞ்சிபுரம் கூட்டுறவு தீவிர கைத்தறி வளர்ச்சித் திட்டம் – தன் விருப்ப ஓய்வில் சென்ற 53 பணியாளர்களுக்கு கருணைத் தொகை வழங்க மாநில சுழற்சி நிதியிலிருந்து ரூ.53,00,000/– கடன் தொகை வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

<u>கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் (டி1) துறை</u>

அரசாணை (நிலை) எண். 42

நாள் 05.03.2013
(நந்தன, மாசி 21
திருவள்ளுவராண்டு 2044)

<u>**படிக்கவும் :–**</u>

கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநரின் கடிதம் எண்.13774/2006/ஜி3,
நாள் 20.07.2010, 25.11.2010 மற்றும் 10.8.2011.

---

<u>ஆணை:–</u>

மேலே படிக்கப்பட்ட கடிதங்களில் கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர், காஞ்சிபுரம் கூட்டுறவு தீவிர கைத்தறி வளர்ச்சித் திட்டம் 1976–இல் தொடங்கப்பட்டு 01.10.1979 முதல் கூட்டுறவு சங்கமாக செயல்பட்டு வந்தது என்றும், இத்திட்டம் 2002–ஆம் ஆண்டு முதல், காஞ்சிபுரம் மத்திய கூட்டுறவு வங்கியில் காசுக்கடன் ஆதாரக் குறைவு காரணமாக திட்ட உறுப்பினர்களுக்கு தொழில் வழங்க வாய்ப்பில்லாத நிலை ஏற்பட்டதாலும், திட்டத்தில் போதிய உற்பத்தி மற்றும் விற்பனை இல்லாததாலும் மிகுந்த நட்டத்தில் இயங்கி வந்ததால் இத்திட்டத்தில் பணிபுரிந்து வந்த 58 பணியாளர்களில் 53 பணியாளர்கள் தன்விருப்ப ஓய்வில் சென்றனர் என்றும் அவ்வாறு தன்விருப்ப ஓய்வில் சென்ற பணியாளர்களுக்கு நிதிப்பயன் வழங்க வேண்டிய சூழல் ஏற்பட்டது என்றும், தன் விருப்ப ஓய்வின் மூலம் விடுவிக்கப்பட்டுள்ள பணியாளர்கள் அரசு நிர்ணயித்த சம்பள விகிதங்களில் ஊதியம் பெறாததால், கோ–ஆப்டெக்ஸ், டான்சி, டான்மார்க் போன்ற பொதுத்துறை நிறுவனங்களில் தன் விருப்ப ஓய்வில் சென்ற பணியாளர்களுக்கு கருணைத் தொகையாக ரூ.1,00,000/– மாநில சுழற்சி நிதியிலிருந்து கடன் வழங்கியுள்ளதைப் போன்று, மேற்படி திட்டத்திலிருந்து தன் விருப்ப ஓய்வில் சென்ற 53 பணியாளர்களுக்கும் கருணைத் தொகையாக ரூ.53,00,000/–ஐ மாநில சுழற்சி நிதியிலிருந்து கடனாக விடுவித்து வழங்குமாறும், அவ்வாறு விடுவிக்கப்படும் கடன் தொகையினை இத்திட்டத்திற்குள் பாத்தியப்பட்ட அனகாபுத்தூரில் உள்ள 28354.48 சதுர அடி பரப்பளவு உள்ள தொழிற்கூடத்தினை அரசு அனுமதியுடன் விற்பனை செய்து கிடைக்கப் பெறும் விற்பனைத் தொகை மூலமாக திரும்ப செலுத்தப்படும் என்றும் மேற்படி இடத்தின் அரசு வழிகாட்டு மதிப்பு ரூ.127.59 இலட்சம் என்றும் மேற்படி பணியாளர்களுக்கு மாநில புதுப்பித்தல் நிதி மூலம் வழங்கப்படும் கடன் தொகையினை காஞ்சிபுரம் கூட்டுறவு தீவிர கைத்தறி வளர்ச்சி திட்டத்தினை

இறுதியாக முடிவு கட்டும் போது (Final liquidation) சொத்துக்களை விற்பனை செய்வதன் மூலம் பெறப்படும் நிதி ஆதாரங்களை கொண்டு திரும்ப செலுத்த வாய்ப்புள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

2. மேலே பத்தி ஒன்றில் உள்ள கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநரின் பரிந்துரையை அரசு கவனமாக பரிசீலனை செய்து, கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு காஞ்சிபுரம் கூட்டுறவு தீவர கைத்தறி வளர்ச்சி திட்ட 53 பணியாளர்களுக்கு தலா ரூ.1,00,000/– வீதம் ரூ.53,00,000/–ஐ (ரூபாய் ஐம்பத்து மூன்று இலட்சம் மட்டும்) மாநில புதுப்பித்தல் நிதியிலிருந்து கடனாக கீழ்க்கண்ட நிபந்தனைக்கு உட்பட்டு ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது. பயனாளிகள் விவரம் மற்றும் மாநில புதுப்பித்தல் நிதியிலிருந்து பெறப்படும் கடன் குறித்த விவரம் பிற்சேர்க்கை I மற்றும் II அளிக்கப்பட்டுள்ளது.

(i) காஞ்சிபுரம் கூட்டுறவு தீவிர கைத்தறி வளர்ச்சித் திட்டத்திற்கு சொந்தமான இடத்தினை, ஒரு காலக்கெடு நிர்ணயித்து விரைவில் விற்பனை செய்து அத்தொகையில் இருந்து இக்கடன் தொகையினை வட்டியுடன் ஒரே தவணையில் அரசுக்கு திரும்ப செலுத்த வேண்டும்.

(ii) இத்திட்டம் தொடர்ந்து செயல்படும் நிலை ஏற்படின் சமகாலாண்டு தவணையில் தலா 1 இலட்சம் வீதம் கடன் மற்றும் வட்டித் தொகை திரும்ப செலுத்தப்பட வேண்டும். மீதமுள்ள தொகையினை விற்பனைத் தொகை மூலம் செலுத்த வேண்டும்.

3. மேலே பத்தி 2–இல் ஒப்பளிக்கப்பட்ட தொகை கீழ்க்காணும் புதிய கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படும்.

> "6851–00–கிராமத்தொழில்கள் மற்றும் சிறுதொழில்களுக்கான கடன்கள் – 103 – கைத்தறித் தொழில்கள் – I திட்டத்தில் சேராதது –AO தமிழ்நாடு கைத்தறி கூட்டுறவு சங்க நிறுவனத்திற்கான தன்விருப்ப ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் கடன்கள் – கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குரின் பொறுப்பிலுள்ளவை – 01 – காஞ்சிபுரம் கூட்டுறவு கைத்தறி நிறுவனத்திற்கான கடன்கள்.
>
> "DPC 6851–00–103–AO–0101 (Outgo)
>
> DPC 6851–00–103–AO–010J (Receipts)"

4. மேற்கண்ட புதிய கணக்குத் தலைப்பிற்கு கணக்கு நேரமைப்பு கட்டுப்பாடு மற்றும் மதிப்பீடு செய்பவர் கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் ஆவார். மேலும் மேற்கூறப்பட்டட புதிய கணக்குத் தலைப்பை தொடங்குமாறு சம்பந்தப்பட்ட மாவட்ட கருவூலக அலுவலர் / சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

5. மேலே பத்தி 2–இல் ஒப்பளிக்கப்பட்ட இச்செலவினம் ஒரு "புது துணைப் பணி" குறித்த செலவினமாகும். இச்செலவினத்திற்கு சட்டப் பேரவையின் ஒப்புதல் நாளடைவில் பெறப்படும். பேரவையின் ஒப்புதல் பெறப்படுவதை எதிர்நோக்கி இச்செலவினத்தை எதிர்பாரா செலவு நிதியிலிருந்து முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதி (வரவு–செலவு பொது–1) துறையால் தனியாக வெளியிடப்படும். எதிர்பாரா செலவு நிதியிலிருந்து முன்பணம் வாங்குவதற்கு தேவையான விண்ணப்பத்தை உரிய படிவத்தில் இருபடிகளில் அனுப்பிவைக்கும்படி

கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார். மேற்காணும் செலவினத்தை துணை மானியக் கோரிக்கை 2012–2013ல் சேர்ப்பதற்கான கருத்துருவை நிதித்துறைக்கு உரிய நேரத்தில் தவறாது அனுப்பி வைக்கும்படி கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

6. மாநில தலைமைக் கணக்காயர் 2012 – 2013ஆம் நிதியாண்டின் முடிவில் இதற்கான சரிகட்டும் பதிவுகளை கீழ்க்கண்ட கணக்குத் தலைப்புகளில் பற்று / வரவு மேற்கொள்ளக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

"8229 00 – வளர்ச்சி மற்றும் நலநிதிகள் – 200 ஏனைய வளர்ச்சி மற்றும் நலநிதிகள் – AJ – தமிழ்நாடு மாநில புதுப்பித்தல் நிதி"

(த.தொ.கு. 8229 00 200 AJ 000D) (வரவு)

(த.தொ.கு. 8229 00 200 AJ 0007) (செலவு)

7. பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் வரவு வைக்கப்பட வேண்டும்.

8680 – 00 – Miscellaneous Government Account –
101 – Ledger Balance Adjustment Account –
AE – Per Contra Credit in respect of Tamil Nadu State Renewal Fund.
(DPC 8680 – 00 – 101 – AE – 000A) (Receipts)

8. இதற்கான வட்டித் தொகையினை பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் வரவு வைக்கப்பட வேண்டும்.

"0049 வட்டி வரவுகள் – 04 மாநில அரசு / மத்திய அரசு / நேரடி ஆட்சிப்பகுதி அரசின் வட்டி வரவுகள் – 190. அரசுத் துறை நிறுவனங்கள் மற்றும் நிறுவனங்கள் ஆகியவற்றிடமிருந்து வட்டி – EC. தமிழ்நாடு கைத்தறி கூட்டுறவு சங்க நிறுவனத்திற்கு தமிழ்நாடு மாநில புதுப்பித்தல் நிதியிலிருந்து அனுமதிக்கப்பட்ட கடன்கள் மீதான வட்டி வரவுகள்.

(த.தொ.கு. 0049 04 190 EC 000D)

9. மேற்கண்ட தொகையைப் பெற்று வழங்க கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநருக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது. மேற்படி தொகை பயனாளிகளுக்கு விடுவிக்கப்பட்டவுடன், விடுவிக்கப்பட்ட தொகைக்கான "பயனீட்டுச் சான்றிதழ்" (Utilization Certificate) அரசின் நிதி (கடன்கள் மற்றும் முன்பணங்கள் குழு) துறைக்கு உடன் அனுப்பி வைக்குமாறும், அதன் நகல் ஒன்றினை கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறைக்கு அனுப்புமாறும் கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

10. இவ்வாணை, நிதித் (தொழில்கள்) துறையின் அலுவல் சார்பற்ற எண். 1139/13, நாள் 23.02.2013–இன் மூலம் பெறப்பட்ட ஒப்புதல், கூடுதல் நிதியொதுக்க பேரேட்டு எண். 2311 (இரண்டாயிரத்து முன்நூற்று பதின்னொன்று), தமிழ்நாடு மாநில புதுப்பித்தல் நிதி பேரேட்டு எண்.2/2012–2013 மூலம் வெளியிடப்படுகிறது மற்றும் கடன் ஒப்பளிப்பு பேரேட்டு எண்.48/2012–2013.

(ஆளுநரின் ஆணைப்படி)

கோ. சந்தானம்
அரசு செயலாளர்

பெறுநர்
கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர்,
குறளகம் இரண்டாம் தளம், சென்னை– 600 108.
மாநில தலைமைக் கணக்காயர் (A&E),சென்னை– 600 018/(பெயரில்)
மாநில தலைமைக் கணக்காயர் (CA), சென்னை– 600 018 /(பெயரில்)
மாநில கணக்காயர் (CAS), சென்னை– 600 009.
சம்பள கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை– 600 001.

<u>நகல் :–</u>
முதலமைச்சர் அவர்களின் முதன்மைச் செயலர், சென்னை– 600 009.
அமைச்சர் (கைத்தறி மற்றும் துணிநூல்) அவர்களின் முதுநிலை
நேர்முக உதவியாளர், சென்னை– 600 009.
நிதித் (தொழில்கள் / வரவு செலவு பொது –I
மற்றும் II (கடன்கள் (ம) முன்பணங்கள்) துறை,
சென்னை– 600 009.
கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் (ஏ1/பி1) துறை,
சென்னை– 600 009.
அரசு செயலாளர் கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை
அவர்களின் தனிச் செயலாளர், சென்னை– 600 009.

/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

அரசு சார்புச் செயலாளர்

பின் இணைப்பு I

| வ. எண். (1) | பணியாளர் பெயர் (2) | பணியில் சேர்ந்த நாள் (3) | தன்விருப்ப ஓய்வின் கீழ் விடுவிக்கப் பட்ட நாள் (4) | வழங்கப்பட வேண்டிய மொத்த நிலுவை (5) | கருணைத் தொகை (6) |
|---|---|---|---|---|---|
| 1. | திருமதி எஸ். லலிதா | 17.01.1978 | 31.01.2002 | 144997 | 1,00,000 |
| 2. | திரு. கே. நடராஜன் | 09.03.1985 | 31.01.2002 | 120246 | 1,00,000 |
| 3. | திரு. என். கன்னிவேலு | 06.04.1984 | 31.01.2002 | 118100 | 1,00,000 |
| 4. | திரு. ஏ. சௌரய்யா | 03.02.1977 | 31.01.2002 | 137979 | 1,00,000 |
| 5. | திரு. என். பாலசுப்ரமணியன் | 11.11.1976 | 28.02.2002 | 152648 | 1,00,000 |
| 6. | திரு. வி.பத்மநாபன் | 14.07.1976 | 31.07.2002 | 160590 | 1,00,000 |
| 7. | திரு. என். சேகரன் | 14.10.1983 | 31.07.2002 | 140995 | 1,00,000 |
| 8. | திரு. ஐ. குருசாமி | 23.09.1985 | 31.07.2002 | 147111 | 1,00,000 |
| 9. | திரு. கே.வரதராஜன் | 20.01.1978 | 14.09.2002 | 152584 | 1,00,000 |
| 10. | திரு. பி.எம். ஏகாம்பரம் | 01.11.1986 | 14.09.2002 | 147859 | 1,00,000 |
| 11. | திரு. இ.சாரங்கபாணி | 12.10.1983 | 14.09.2002 | 147998 | 1,00,000 |
| 12. | திரு. பி.எஸ்.பாலசுந்தரம் | 25.05.1984 | 14.09.2002 | 161698 | 1,00,000 |
| 13. | திருமதி. என். சித்ரா | 10.10.1984 | 14.09.2002 | 153974 | 1,00,000 |
| 14. | திரு. யூ. தேவராஜன் | 09.03.1978 | 31.10.2002 | 182527 | 1,00,000 |
| 15. | திரு. சி.ராமலிங்கம் | 22.06.1978 | 31.10.2002 | 173454 | 1,00,000 |
| 16. | திரு. என். அண்ணாமலை | 16.12.1978 | 31.10.2002 | 163113 | 1,00,000 |
| 17. | திரு. ஜி. சீனிவாசன் | 16.12.1978 | 31.10.2002 | 160504 | 1,00,000 |
| 18. | திரு. எஸ். ராஜேந்திரன் | 16.05.1981 | 31.10.2002 | 169347 | 1,00,000 |
| 19. | திரு. எஸ். குருநாதன் | 16.05.1981 | 31.10.2002 | 156936 | 1,00,000 |
| 20. | திரு. என். ஆறுமுகம் | 01.03.1983 | 31.10.2002 | 159478 | 1,00,000 |
| 21. | திரு.சி.மோகனன் | 16.12.1977 | 31.10.2002 | 212549 | 1,00,000 |
| 22. | திரு. ப்பி. உலகநாதன் | 22.12.1983 | 31.10.2002 | 151483 | 1,00,000 |
| 23. | திரு.இ. தனசேகரன் | 10.11.1976 | 31.10.2002 | 145964 | 1,00,000 |
| 24. | திருமதி. ஜே.சுப்புலட்சுமி | 30.05.1978 | 05.03.2002 | 128957 | 1,00,000 |
| 25. | திரு. வி.வஜ்ஜிரவேலு | 14.10.1983 | 31.12.2002 | 135073 | 1,00,000 |
| 26. | திரு. எம். தெய்வமணி | 01.06.1979 | 31.12.2002 | 152672 | 1,00,000 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 27. | திரு. எம்.கே.மூர்த்தி | 06.08.1982 | 31.12.2002 | 153263 | 1,00,000 |
| 28. | திரு. டி. சிட்டிபாபு | 12.04.1984 | 31.12.2002 | 117109 | 1,00,000 |
| 29. | திரு. எஸ். நாகரத்தினம் | 15.02.1980 | 31.12.2002 | 130502 | 1,00,000 |
| 30. | திரு.ஆர் .பொன்ரங்கநாதன் | 14.10.1983 | 31.12.2002 | 178225 | 1,00,000 |
| 31. | திரு. சி. ராமகிருஷ்ணன் | 14.04.1978 | 28.02.2003 | 163319 | 1,00,000 |
| 32. | திரு. எம்.சுந்தரம் | 07.07.1978 | 31.05.2003 | 155491 | 1,00,000 |
| 33. | திரு. எஸ்.வினாயகம் | 01.11.1976 | 31.05.2004 | 132949 | 1,00,000 |
| 34. | திரு. கே.பி. செல்வராஜ் | 01.03.1977 | 01.01.2005 | 174570 | 1,00,000 |
| 35. | திரு. ப்பி. அண்ணாதுரை | 01.06.1976 | 31.01.2002 | 132900 | 1,00,000 |
| 36. | திரு. எம்.பிரகாசம் | 15.09.1983 | 31.08.2005 | 167828 | 1,00,000 |
| 37. | திரு.எஸ்.ஞானவேலு | 18.05.1979 | 14.09.2002 | 138613 | 1,00,000 |
| 38. | திரு. ஆர்.லோகநாதன் | 14.10.1983 | 31.12.2005 | 168400 | 1,00,000 |
| 39. | திரு.ஆர்.நாகலிங்கம் | 23.12.1983 | 28.11.2003 | 174085 | 1,00,000 |
| 40. | திரு. ஆர். உத்திரகுமாரன் | 04.04.1977 | 20.08.2001 | 132498 | 1,00,000 |
| 41. | திரு. ஏ.அகதீசன் | 07.07.1978 | 30.09.1998 | 130200 | 1,00,000 |
| 42. | திரு. ஏ. கண்ணப்பன் | 26.04.1984 | 24.10.2005 | 232669 | 1,00,000 |
| 43. | திரு. எஸ். கண்ணப்பன் | 03.01.1984 | 31.12.2005 | 167924 | 1,00,000 |
| 44. | திரு. என். வேலாயுதம் | 03.01.1994 | 31.12.2005 | 194162 | 1,00,000 |
| 45. | திரு. ஏ. தருமன் | 11.11.1976 | 20.03.2006 | 284721 | 1,00,000 |
| 46. | திரு. சி.ஆர்.ஆராவமுதன் | 26.12.1976 | 20.03.2006 | 262862 | 1,00,000 |
| 47. | திரு.எஸ். சிவகுமாரன் | 19.03.1984 | 31.12.2005 | 173047 | 1,00,000 |
| 48. | திரு.ஜே. தியாகராஜன் | 27.06.1977 | 23.03.2006 | 196411 | 1,00,000 |
| 49. | திருமதி. ஜே.லதா | 06.07.1978 | 20.03.2006 | 233610 | 1,00,000 |
| 50. | திரு. ப்பி.நடராஜன் | 11.06.1984 | 23.03.2006 | 257206 | 1,00,000 |
| 51. | திரு.கே. தாண்டவமூர்த்தி | 16.06.1984 | 01.08.2009 | 229352 | 1,00,000 |
| 52. | திரு.ஜி.தெய்வசிகாமணி | 08.06.1984 | 01.08.2009 | 217924 | 1,00,000 |
| 53. | திரு. வி.ஏகாம்பரம் | 07.07.1978 | 14.10.2009 | 419747 | 1,00,000 |
| | மொத்தம் | | | 90,98,423 | 53,00,000 |

கோ. சந்தானம்
அரசு செயலாளர்

/ உண்மை நகல் /

பிரிவு அலுவலர்

## Annexure-II

LOAN SANCTIONED BY GOVERNMENT OF TAMILNADU FROM TAMILNADU STATE RENEWAL FUND

Loan sanction Ledger No.48/2012-2013 and State Renewal Fund Ledger No.2/2012-2013

| | | |
|---|---|---|
| 1. | Name of the Borrower | Kancheepuram Co-operative Theevira Handloom Valarchi Thittam, Kancheepuram. |
| 2. | HOD controlling the Borrower | Director of Handlooms and Textiles, Chennai-108. |
| 3. | Amount sanctioned | Rs.53,00,000/- (Rupees Fifty three lakhs only) |
| 4. | Sanction valid upto | 31.03.2013 |
| 5. | Purpose of Loan | To meet the expenditure relating to Voluntary Retirement Scheme to all benefit 53 workers of Kancheepuram Co-operative Theevira Handloom Valarchi Thittam, Kancheepuram. |
| 6. | Payable in cash or adjustment | Cash |
| 7. | Demand No. Sub Head Detailed Head under which loan is sanctioned (Both outgo and receipt) | Demand No.17<br>"6851 00 Loans for Villages and Small Industries – 103. Handloom Industries – I Non Plan - AO – Loan to Tamil Nadu Industrial Co-operative Societies Ltd - towards self loan of Voluntary Retirement Scheme benefit etc. – Controlled by Director of Handlooms and Textiles – 01 Loans to Kancheepuram Co-operative Theevira Handloom Valarchi Thittam".<br>(DPC 6851 00 103 AO 0101 (Outgoings)<br>(DPC 6851 00 103 AO 010J (Receipts) |
| 8. | Repayment Period | Repayment of loan in one lumsum with interest as early as possible by disposing the property, if the scheme is continued, the loan will be repaid on quarterly basis at Rs.1.00 lakhs each. |
| 9. | Moratorium towards repayment if any | –do– |

| | | |
|---|---|---|
| 10. | Date on which repayment is to commence | Repayment of loan in one lumpsum with interest as early as possible by disposing the property, if the scheme is continued, the loan will be repaid on quarterly basis at Rs.1.00 lakhs each. |
| 11. | Mode of repayment | Repayment of loan in one lumpsum with interest as early as possible by disposing the property, if the scheme is continued, the loan will be repaid on quarterly basis at Rs.1.00 lakhs each. |
| 12. | Interest<br>a. Normal rate subject to orders of Government on fixing of Rate of interest for the financial year. | 12% |
| | b. Penal rate of interest | 2.5 % |
| | c. Mode of recovery of interest | In one lumpsum as soon as the building and other assets are disposed off. |
| 13. | The Head of Account to which interest has to be credited. | 0049. Interest receipts – 04 Interest receipt from State / Union Territory Government – 190 Interest from Public Sector and other undertaking - EC. Interest receipts from Tamil Nadu Industrial Cooperative Societies Ltd. for the loans sanctioned from Tamil Nadu State Renewal Fund<br>(DPC 0049-04-190—EC-0000) |
| 14. | G.O. No. & Date | G.O.(Ms) No.42, Handlooms, Handicrafts, Textiles and Khadi (D1) Department, dated 05.03.2013. |

G.Santhanam
Secretary to Government

/ True Copy /

Section Officer